# மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11–ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண்.44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திருமதி. ஷர்மிளா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **மாணிக்கசெல்வம்** | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**11.09.2025** **OS.11/2022** **வா.சா.1 ஆஜர்**

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

நான் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை பார்த்தேனா என்றால் சாட்சி முதலில் பார்க்கவில்லை என்று சொல்லிவிட்டு மீண்டும் பார்த்ததாக மாற்றி சாட்சியம் அளிக்கிறார். நான் தாவா சொத்தை போய் பார்த்த போது எப்படிப்பட்ட நிலமாக இருந்தது என்றால் தாவா சொத்தில் தென்னை மரங்கள் இருந்தது. தாவா சொத்தானது சதுரமாக இருந்தது. நான் தாவா சொத்தை போய் பார்த்த போது பாதை வசதி இருந்ததா என்றால் 4 பக்கமும் பாதை இருப்பதாக 1ம் பிரதிவாதி சுகுணா தெரிவித்தார். 4 திசைகளிலும் பாதை உள்ளதை நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன். நான் சொல்வது போல் தாவா சொத்துக்கு 4 திசைகளிலும் பாதை இல்லை என்றாலும் நான் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை பார்வையிடவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை நான் கிரையம் வாங்கிய சமயத்தில் கிரைய தொகை எவ்வளவு என நிர்ணயிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அது என் கணவருக்கு தான் தெரியும். தாவா சொத்தை கிரையம் பேசி முடித்து தொகை கொடுத்த விபரங்கள் அனைத்தும் எனது கணவருக்கு தான் தெரியும் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய தாவா சொத்திற்கு கிரைய பாக்கி தொகையாக ரூ.4,79,000/– நான் கொடுக்க வேண்டி உள்ளது என்றால் சரியல்ல. தொகை முழுவதும் கொடுக்கப்பட்டுவிட்டது. தாவா சொத்தை கிரையம் வாங்கிய பின் எப்போது நான் தாவா சொத்திற்கு சென்றேன் என்றால் தாவா சொத்தை நாங்கள் 2017ம் ஆண்டு கிரையம் வாங்கினோம். அதன் பின் எனது கணவர் தான் தாவா சொத்தில் வேலி அமைத்து கட்டிடம் கட்டி வந்தார். நான் எப்போது சென்றேன் என்று எனக்கு நினைவில்லை. தாவா சொத்தில் ரூம் கட்டிய பின்பு நான் சென்று பார்த்தேன். நான் தாவா சொத்தை பார்வையிட சென்ற போது எந்த வழியாக போனேன், வழி எப்படி இருந்தது என்றால் காமாட்சி அம்மன் கோவில் வழியாக சென்றேன். பிரதிவாதிகள் இடத்திலிருந்து நான் கிரையம் வாங்கிய இடத்திற்கு நடந்து சென்றேன். எனக்கு தாவா சொத்தை பற்றியோ அதில் பாதை இருப்பது பற்றியோ எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றாலும், தாவா சொத்து முழுவதுமே தென்னந்தோப்பாக தான் உள்ளது என்றாலும், நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் 15 அடி அகலம் 200 அடி நீளம் கொண்ட பாதை எதுவும் தாவா சொத்தில் இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு பாத்தியமான தோப்பின் வழியாக நாங்களும் நடந்து சென்று புழங்கி வருகிறோம் என்றால் சரிதான். நாங்கள் நடந்து செல்லும் பாதையில் பிரதிவாதிகள் உழுதும் தண்ணீர் பாய்ச்சியும் பயன்படுத்தி வருவதால் நடந்து சென்று தாவா சொத்தை புழங்க முடியாமல் இருந்து வருகிறது. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கிய போது நஞ்சை நிலமாக கிரையம்

வாங்கினேனா இல்லை வீட்டு மனையாக கிரையம் வாங்கினேனா என்றால் தாவா சொத்தை நாங்கள் கிரையம் வாங்கிய சமயம் நஞ்சை நிலமாக தான் இருந்தது, வீடு கட்டுவதற்காக வாங்கினோம். தாவா சொத்தில் பாதை எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கம் போல் தாவா சொத்தில் வாதிகள் நடந்து சென்று புழங்கி வருவதில் பிரதிவாதிகளுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கில் நான் சொல்லியுள்ளது போல் பொது பாதை எதுவும் இல்லை என்றாலும், நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam